**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-06032022-4698

Volume: 6

Issue: 3

Month: January

Year: 2022

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 19.10.2021

Accepted: 28.11.2021

Published: 01.01.2022

Citation:
Premanand, A. "Kurunseithi (SMS) Ithalum, Kavithaikana Muneedugalum." Shanlax International Journal of Tamil Research, vol. 6, no. 3, 2021, pp. 223–28.

DOI:
https://doi.org/10.34293/tamil.v6i3.4698

*Corresponding Author:
epremanand87@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Kurunseithi (SMS) Ithalum, Kavithaikana Muneedugalum

**Dr. A. Premanand**
*Program Host & Screenplay Writer*
*Puthuvai Doordarshan TV Station, Puducherry, India*
http://orcid.org/0000-0002-1994-8569

**Abstract** - The term 'modern' continues to operate in the literary sphere at present. Literature is a reflection of all the morals of man. So it is impossible to separate man and literature. Literary form is as dynamic as human minds. The reason for such a change in literature is due to scientific discoveries. What has literature got to do with scientific devices? The question may arise. Literary exchanges through 'cell phone' (Mobile or Phones) are currently handled as a journal by 'short message' or 'text message'. Therefore, this article examines all the poems published in this genre under the title "Kurunseithi (SMS) Ithalum, Kavithaikana Muneedugalum" which are trying to be current modern poetry.

**Keywords:** SMS, Modern Poetry, Cell Phone, Haiku Revival Poetry

## References

1. Arulmurugan, A.S. 2010. *Ithazhiyal Valarchiyil Kurunseithi (SMS) Ithazh*, Tiruchirappalli, Raja Veliyeedu.
2. Mathiazhagan. 2009. *Tamilaaivu-Thiranaivu*, Chennai, Mithra Veliyeedu.
3. Padmanabhan P. and Thillaivanam, S. 2006. *Journalism-Communication Studies*, Puducherry: Thozh Ilamurugu Pathipagam.

# குறுஞ்செய்தி (SMS) இதழும் நவீன கவிதைக்கான முன்னீடுகளும்

**முனைவர் ஏ. பிரேமானந்த்**
நிகழ்ச்சித் தொகுப்பாளர் திரைக்கதை எழுத்தாளர்,
புதுவை தூர்தர்ஷன் தொலைக்காட்சி நிலையம், புதுச்சேரி

**ஆய்வுச் சுருக்கம்**
*"நவீனம்" என்கிற சொல்லாடல் இலக்கியப் பரப்பில் தற்போது தொடர்ந்து இயங்கி வருகிறது. மனிதனின் அனைத்து ஒழுக்கங்களின் பிரதிபலிப்பே இலக்கியமாகும். அதனால் மனிதனையும் இலக்கியத்தையும் தனியாகப் பிரித்து பார்ப்பதென்பது சாத்தியமில்லாதது ஆகும். மனித மனங்களைப் போலவே இலக்கிய வடிவமும் மாறும் தன்மையுடையது. அத்தகைய மாறுதலுக்கு இலக்கியம் உட்பட காரணம், அறிவியல் கண்டுபிடிப்புகளேயாகும். இலக்கியத்திற்கும், அறிவியல் சார்ந்த சாதனங்களுக்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது? என்ற கேள்வி எழலாம். "செல்லிடப்பேசி"* (Mobile or Phones)*யின் வழியாக இலக்கியப் பரிமாறுதல்கள் தற்போது "குறுந்தகவல்" அல்லது "குறுஞ்செய்தி"* (Short Message Service) *மூலம் ஓர் இதழாகக் கையாளப்பட்டு வருகிறது. எனவே, இவ்விதழில் வெளிவரும் கவிதைகள் அனைத்தும் தற்போதைய நவீன கவிதைகளாக முயற்சித்து வருவதனை, குறுஞ்செய்தி இதழும் நவீன கவிதைக்கான முன்னீடுகளும் என்ற தலைப்பின் மூலம் இந்தக் கட்டுரை ஆராய்கிறது.*

***முக்கியச் சொற்கள்:*** *குறுஞ்செய்தி, நவீன கவிதைகள், செல்லிடப்பேசி, ஹைக்கூ, புதுக்கவிதை*

உலகின் முதல் செல்லிடப்பேசி 1946-ஆம் ஆண்டில் "செயிண்ட் லூயிஸ்" என்பவரால் தயாரிக்கப்பட்டது. பிற்காலத்தில் இதன் வடிவத்திலும் தொழில்நுட்பத்திலும் ஏற்பட்ட வளர்ச்சியின் காரணமாகப் புதிய வசதிகள் பயன்பாட்டிற்கு வரத்தொடங்கின. செல்லிடப்பேசிகளில் இடம்பெற்றுள்ள தொழில்நுட்பம், பல (Technology and Facilities) வசதிகளின் அடிப்படையில் மூன்று வகைகளாகப் பகுக்கப்பட்டிருக்கிறது. அவை,

1. முதல் தலைமுறையினர் (First Generation or Anology Voice)
2. இரண்டாம் தலைமுறையினர் (Second Generation or Digital Voice)
3. மூன்றாம் தலைமுறையினர் (Third Generation or Digital Voice) என்பவனவாகும்.

செல்லிடப்பேசியின் வழியாக "குறுந்தகவல்" அல்லது "குறுஞ்செய்தி"யின் மூலம் எண்ணற்ற தகவல்கள் இன்றைய இளைஞர்-இளைஞிகளிடையே கிண்டலுக்கும் கேலிகைக்கும் கொஞ்சல் மற்றும் ஆபாச வார்த்தைகளுக்கும் பயன்படுவனவாக இருக்கிறது என்பது அனைவருக்கும் தெரிந்த ஒன்று. இத்தகைய சூழலில், இலக்கியத்திற்கென பல்வேறு ஊடகங்கள் இருப்பினும் ஏன் செல்லிடப்பேசியைக் கொண்டு, இலக்கியத்திற்கான ஒரு மாறுபட்ட இதழாக, குறுந்தகவல்கள் உருவாகக் கூடாது? என்கின்ற சிந்தனையின் விளைவால் தோன்றியதே குறுஞ்செய்தி இதழ்களாகும். பொன். குமார், ம. ஞானசேகரன், கன்னிக்கோயில் ராஜா மற்றும் அருணாச்சல சிவா போன்றோர்களால் அறிமுகப்பட்ட இவ்வகை இலக்கிய இதழானது, 2005-இல் முதல் நடைப்பெற்றுக் கொண்டிருக்கிற 2021 வரை செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

இத்தகைய குறுகிய கால கட்டத்தில் தோன்றி வளர்ந்து வருகிற குறுஞ்செய்தி இதழ்களில்

குறுங்கவிதைகள்-குறுங்கதைகள்-புத்தக மதிப்புரைகள்-விமரிசனங்கள், இலக்கிய கூட்டங்கள்-சந்திப்பு நிகழ்ச்சிகள்-வாதம் விவாதம்-போட்டிகள்-கேள்வி பதில்கள் என ஓர் இலக்கியத்தின் பிரதி (Text) இதழுக்கான பொதுவான தன்மைகளைப் பெற்று, குறுந்தகவல்களுக்கான இலக்கிய வடிவத்தினை இலக்கிய உலகிற்கு அறிமுகப்படுத்துவதோடு நின்றுவிடாமல், தன்னுடைய அடையாளத்தையும் பதிக்கும் முயற்சியில் குறுஞ்செய்தி இதழ்கள் தொடர்ந்து செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. அவை வருமாறு:

கன்னிகோயில் இராஜா,
இராகா,
ஜாலி கவிக்கடல்,
செந்தமிழ்,
ஜெயம்,
குறிஞ்சி
வாலிதாசன்
இலிங்கம்

என இருபதுக்கும் மேற்பட்ட குறுஞ்செய்தி இதழ்கள் சமகாலத்தில் இயங்கி வருகின்றன. இத்தகைய இதழ்கள் செல்லிடப்பேசியின் மூலம் தினமும் 350-க்கும் மேற்பட்ட நபர்களுக்கு தமிழ் மற்றும் ஆங்கிலம் என இரு மொழிகளில் தட்டச்சு செய்து அனுப்பப்பட்டு வருகின்றன. இதில், குறுங்கவிதைகளே இந்தக் கட்டுரையின் ஆய்வாக எடுத்துக்கொள்வதால், குறுங்கவிதை எப்படி "புதுக்கவிதை" தன்மைப்பெற்று, பிறகுநவீனகவிதையாகஎப்படிமாற்றமடை கிறதைக் கூறும் விதமாக அடுத்தடுத்த ஆய்வுகளின் மூலம் விளக்கப்படுகின்றன. ஏறத்தாழ 400 ஆண்டுகால வாழ்வுடையது ஹைக்கூ ஆகும். சொல் விளையாட்டாகத் தொடங்கி அதனைப் "பாஷோ" இலக்கியமாக்கினார். இதனை:

பாஷோ ஹைகூ கவிதைக்கு அடிக்கல் நாட்டினார். "பூஸன்" அதன் எல்லையை விரிவுபடுத்தினார். "ஐஸா" இதனைக் கலைக்கு மேலாக, முருகியல் மதிப்பீட்டுக்கும் மேலாக வாழ்வுடன் இணைத்துச் சிறப்பாக்கினார். "ஷிகி" உலகினை அழகுக் கண்ணோட்டத்தில் கண்டார்.

இவ்வாறு ஹைகூ நால்வரின் கவிதைப் பங்களிப்போடு, ஜப்பானில் வளர்ந்து, பிறகு கொஞ்சம் கொஞ்சமாகத் தமிழ்நாட்டில் புகுந்தது என்பதை, குறுஞ்செய்தி இதழ் கவிதைகள் சாட்சியாக இருக்கின்றன.

**நிர்வாண மரங்கள்**
**மானம் காக்கும் துடிப்பில்**
**மார்கழிப்பனி**

என்கிற விக்னாபாக்கியநாதன் என்பவரின் குறுங்கவிதையானது, இயற்கை தந்த அனைத்து உயிர்களுக்கும் உயிரே மானம். இது மனிதனுக்கு மட்டுமல்ல, மரங்களுக்கும் மானம் இருக்கிறது என்பதை, இந்தக் கவிதை உறுதி செய்கிறது. இதைப்போல்,

**உன் ஆடைகளைத்**
**துவைத்து துவைத்து**
**தூய்மையாகிறது ஓடை**

என்கிற குணசேகரன் குறுங்கவிதையானது, ஒரு காதலை மையமிட்டு இருக்கிறது. தன் காதலியின் ஏக்கத்தை, உவமைபடுத்தும் நோக்கில் எழுதி இருப்பதாக இந்தக் கவிதை அமைகிறது. இத்தகைய ஹைகூக்களிலிருந்து புதுக்கவிதைக்கான ஓர் அறிமுகத்தை, அடுத்து குறுஞ்செய்தி இதழ்கள் பெற வாய்ப்பாக அமைந்திருந்தன. இதனால் நிறைய கவிஞர்கள் புதுக்கவிதையை எழுத துணிந்தனர்.

இதுதான் புதுக்கவிதை என்ற கேள்விக்குப் பதிலளிக்கும் வண்ணம், முதலில் சிறுபத்திரிகைகளில் புதுக்கவிதை தன்னை அறிமுகப்படுத்திக்கொண்டது. 1933-இல் தோன்றிய மணிக்கொடியிலும், 1942-இல் தொடங்கிய கலாமோகினியிலும் வசனக்கவிதை குறித்த பேச்சு அடிபடவே, புதுமைப்பித்தன்,

கு.ப.ரா, க.நா.சு, ந. பிச்சமூர்த்தி மற்றும் சாலிவாகனன் போன்றோர் வசனகவிதை பற்றிய விவாதத்தில் பங்கெடுத்தனர். இவர்களைத் தொடர்ந்து 1959-இல் சி.சு.செல்லப்பாவால் தொடங்கப்பெற்ற எழுத்து இதழும், 1970-இல் தொடங்கிய கசடதபற இதழும் புதுக்கவிதைக் குறித்த பேச்சை முன்னெடுத்து சென்றன. ஆகவே, ஓர் இதழின் மூலமாகவே புதுக்கவிதை என்ற இலக்கிய வடிவம் இன்றைய வாசகர்களுக்கும் படைப்பாளர்களுக்கும் தெரியும் விதமாக இருக்கும்போது, குறுஞ்செய்தி இதழில் வடிவம்பெறும் புதுக்கவிதைகளை இன்றைய வாசகர்களுக்கும் படைப்பாளர்களுக்கும் கொண்டு செல்லப்படுவது முதன்மையாகும்.

**“சாவிகளைக் கொடுங்களேன்**
**பகலிரவாய்ப் பாடுபட்டும்**
**பதவிக்கு வந்தும் ஏனோ**
**பொம்மைகளாகிக் கிடக்கிறோம்**
**ஆண்களிடம் இழந்துவிட்டு”**

ஆண் அதிகாரமென்பது பெண்களுக்குப் புதிதானது அல்ல. ஆண்களின் பார்வையிலேயே இந்தச் சமூகம் இயங்கும்போது, பெண்கள் தட்டிக்கேட்காமல் ஒதுங்கி போவதே உத்தமம். இந்தக் கருத்துக்குத் துணை சேர்க்கும் விதமாக, என்னதான் படிப்பும் பட்டமும் பெண்களுக்குத் தகுதியைத் தந்தாலும், பதவியில் ஆண்களே தகுதியைப் பெறுகின்றனர் என்பதை சி. கலைவாணி என்பவரின் கவிதை வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றது.

**“உறவுகளற்ற பாலையில்**
**மணற்புயலில் சிக்குண்டு**
**சிறகொடிந்த பறவை**
**அடைக்காக்கும் கடைசி முட்டையின்**
**உயிர்கருவில் உருவாகிறது**
**ஒரு கவிதை”**

ஒரு கவிதையின் இருப்பிடம் எது? அது உருவாக ஒரு படைப்பாளி எத்தகைய சிரமத்தை எடுக்க வேண்டிருக்கிறது. அப்படியே ஒரு கவிதை உருவானாலும், அதனை அடைக்காக்க வேண்டிய கடமை இந்தச் சமூகத்தினரிடம் இருக்கிறது என்பதையும், கவிதையே ஓர் உயிருள்ள குழந்தை போன்றது என்று அருணாச்சல சிவா என்பரின் இந்தக் கவிதை நமக்கு உணர்த்துகிறது.

**“உன் கண் திரியின்**
**பார்வை வெளிச்சத்தில்**
**எரித்தாய் என் இருள் காட்டை**
**உன் விளக்கினடியில்**
**குவிந்து கிடக்கிறேன்**
**சாம்பலாய் நான்”**

ஓர் உக்கரமான காதல் கவிதையிது. காதல் செய்யும் ஒருவனின் மனப்பிழற்றலை நாணற்காடன் என்பவர் கவிதை வடிவில் அழகாகத் தந்திருக்கிறார். இதுவரை பிரதியின் மூலமாகவே பார்க்கப்பட்ட, வாசிக்கப்பட்ட புதுக்கவிதைகள், குறுஞ்செய்தி இதழில் வரும் கவிதைகள் எவ்வித மாறுதல்களைப் பெற்று இருக்கின்றன என்பதை, மேலே சுட்டிக்காட்டிய கவிதைகளின் மூலம் புரிந்துகொள்ள முடிகின்றது. 1970-களில் ஏற்பட்ட புதுக்கவிதை பற்றிய பிம்பங்கள் 1990-களில் வடிவரீதியிலும் வெளிப்பாட்டு ரீதியிலும் உள்ளடக்கரீதியிலும் மாறத் தொடங்கியதை இந்திரன், ராஜமார்த்தாண்டன், அன்பாதவன், கரிகாலன் மற்றும் பிரேம்-ரமேஷ் போன்றோரின் கருத்துகள் வெளிப்படுத்துக்கின்றன. புதுக்கவிதை என்ற பெயரில் அழைக்காமல் நவீன கவிதை என்று குறிப்பிடும் அளவிற்குக் கவிதையின் போக்கு குறித்த பிம்பங்கள் மாறிவருவதை இவர்கள்தம் கவிதைகள் குறித்த சிந்தனைகள் காட்டுகின்றன. இவர்களையன்றி, குறுஞ்செய்தி இதழில் வரும் கவிதைகளும் நவீன கவிதைக்கான

வடிவம் பெறுவதை, மேற்குறிப்பிட்ட கவிதைகளின் மூலம் பார்க்கமுடிகின்றது.

**"தூசி படிந்த**
**எனது எழுத்துகளை**
**வெள்ளைநிற துணியால்**
**துடைத்து எடுக்கையில்**
**நைந்து போகிறது**
**இந்தப் பிரபஞ்சத்தின் மனம்"**

இச்சமூகமானது, நன்மை-தீமைகளின் இருப்பிடமாக இருக்கிறது. சமூகத்தில் புறமான செயல்கள் நடைபெறும்போது, அதனை எதிர்க்க துணிவு இல்லாமலும், தன்னை இந்தச் சமூகத்தினூடே இணைத்து கொள்ள விருப்பமில்லாமலும் இருக்கும் ஒரு மனிதனின் அவலக்குரலாக குறிஞ்சி மைந்தன் என்பவர் தன்னுடைய மனவெழுச்சியை இந்தக் கவிதையின் மூலம் பதிவு செய்திருக்கிறார். புதுக்கவிதையிலிருந்து மாறுபடும்போது, அதிக வரிகளையும், ஒரு நிகழ்வைக் குறித்த ஆழமான எண்ணத்தையும், படைப்பாளர்கள் குறுஞ்செய்தி இதழில் தரும்போது, எழுத்து எண்ணிக்கையை (160லிருந்து சுமார் 200க்கும் மேலாக) குறுந்தகவல் பெறுகிறது. இதனால், குறுந்தகவல் என்கிற கட்டுப்பாட்டை உடைத்து, நவீன கவிதையானது, குறுஞ்செய்தியை இன்னுமொரு தளத்திற்குக் கொண்டு போகிறது.

**"உனை விரும்பும்**
**கண்ணாடி அருகில் இருந்தும்**
**விலகி இருக்கும் இன்னொன்றில்**
**உருவம் காண நினைக்கும் பிரியசகியே**
**உன் கையில் இருக்கும்**
**காதல் கல்லை எறிந்து பார்**
**பல துண்டுகளாய் உடைந்தாலும்**
**அத்தனையிலும் தெரியும்**
**மொத்தமாய் உன் பிம்பம்"**

ஒரு கவிதையே இங்குப் பிம்பமாகக் காட்சியளிக்கிறது. காதலை மையமிட்ட இந்தக் கவிதையில் காதல் என்கிற கல் தான் நேசித்த காதலியின் பிம்பத்தை உடைக்கும் அளவிற்குச் சக்தி வாய்ந்ததாக இருக்கிறது என்பதை, கவிதூதன் என்பவர் மிக அழகாகப் பதிவு செய்துள்ளார்.

**"விமோச்சனங்களில்**
**நீர்த்துப்போன காகிதங்களை**
**அனைத்தையும்பத்திரப்படுத்துகின்றேன்**
**புணர்தலுக்குச் சண்டையிட்டுக் கொண்டிருந்த**
**தடித்த உடலிலிருந்து ஒருபிடி அளவுள்ள**
**குருதி தரை இறங்குகிறது**
**பெரு வேட்கைக்கொண்ட அந்த நிலப்பரப்பு**
**குருதியை மையமிட்டுக் கொண்டே வாழ்கிறது**
**கடிந்து கொண்ட மனமானது**
**நெருப்பில் விழுந்துவிட முயற்சிகளைத் தொடந்து செயல்பட்டுக் கொண்டே இருக்கிறது"**

உயிரானது, ஓர் உடலை அடைய எடுத்துக் கொண்ட முயற்சி வேட்கை-காமம்-ஆசை என்கிற நிலையில் நின்று விடும்போது, உயிரைப் பற்றிக்கொண்ட உடல் என்னவாக?, எப்படியாக இருக்கும்? என்ற கேள்விகளுடனே இந்தக் கவிதை பயணிக்கிறது. உலகில் பிறந்த அனைவருக்கும் "புணர்ச்சி' அல்லது "புணர்தல்" என்பது இயல்பானது என்பதை விளக்கும் நோக்கில் குறிஞ்சி மைந்தனின் கவிதை அமைவனவாக இருக்கிறது என்று உறுதிப்படுத்தலாம்.

நிறைவாக, தற்போதைய இலக்கியப் போக்கு என்பது இணையத்தின் வழியாகவும் (வலைத்தளங்கள், வலைப்பூக்கள்) செயல்பட்டுக் கொண்டிருப்பது அனைவருக்கும் தெரிந்த செய்தி. அதைப்போல், குறுஞ்செய்தி இதழ்கள் வெளிட்ட கவிதைகளும் இணையத்தின்

வழி பார்க்கும்படி, குறுஞ்செய்தியின் மீது ஆர்வம் கொண்ட திருச்சியைச் சேர்ந்த "கிரிஜா மணாளன்" என்பவர், "அன்புடன் குழுமம்" www.groups.google.com/group/anbudan www.anthimazhai.com இதன் வளர்ச்சியாக மற்றுமொரு வலைத்தளங்களையும் வலைப்பூக்களையும் உருவாக்கும் முயற்சியில் குறுஞ்செய்தி இதழ்கள் இருந்தபோது, www.smskavignarka-lworld.blogspot.com ©ØÖ® www.smspoets.tamil.blogspot.com தொடங்கப்பட்டது. இதில் தொடந்து கவிதை எழுதியவர்களும் வலைப்பூக்களை இணையத்தில் உருவாக்கிக் கொண்டனர். அ. இராஜிவ்காந்தி www.ezhilkavi.blogspot.com என்றும் பா. தியாகு www.pa&thiyagu.blogspot.com என்றும் தங்களுக்கான வலைத்தளங்களை உருவாக்கிக் கொண்டனர். இத்தகைய குறுஞ்செய்தி இதழ், நவீன கவிதைகளைக் கொடுப்பது மட்டுமல்லாமல், நவீனகால இலக்கிய வடிவங்கள், பிற்காலத்தில் குறுஞ்செய்தி வடிவத்தில் வருவதற்கான நிறைய வாய்ப்புகள் அமையும் என்கிற முன்னேற்பாடுகளை மனதில் நிறுத்திக் கொண்டு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதையும் நாம் மனத்தில் நிறுத்திக்கொள்ள வேண்டும்.

## துணைநின்ற நூல்கள்


1. அருள் முருகன், அ.ச. 2010. இதழியல் வளர்ச்சியில் குறுஞ்செய்தி (SMS) இதழ். திருச்சிராப்பள்ளி: இராஜா வெளியீடு.
2. மதியழகன், ம. (2009). தமிழாய்வு-திறனாய்வு வரலாறு. சென்னை, மித்ர வெளியீடு.
3. பத்மநாபன், ப. தில்லைவனம், சு. 2006. இதழியல்-தகவல் தொடர்பியல் ஆய்வுகள். புதுச்சேரி: தொல் இளமுருகு பதிப்பகம்.